# பொந்தில்

Vol - 1 PONTHIL  மும்மாத இதழ் அக்டோபர் 2010  Issue - 4

Rs. 500/-
for Life members

## ராஜா தேசிங்கு நினைவு நாள் (3-10-2010) மலர்



03-10-2010 அன்று செஞ்சியில் நடைபெற்ற ராஜா தேசிங்கு நினைவு நாள் விழா, ராஜா தேசிங்கு உயிர் நீத்த செஞ்சி கடலி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட செஞ்சி நகர மன்றத் தலைவர் திரு. மஸ்தான், செஞ்சி நகர வட்டாட்சியர் அவர்களுடன் பொந்தில் சங்க மாநில தலைவர் சங்கக் காப்பாளர் மற்றும் கிளைச் சங்க நிருவாகிகள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் காட்சி.



PONTHIL : An Organ of Bondil Association

Visit Website : www.bondil.org
E-mail id : bondil2008@yahoo.in

पोन्तील

# *Congratulations to B. ADITYA*

**B. ADITYA** son of **Dr.K.Balaji Singh** and **Dr. Lakshmi Balaji** studying in D.A.V. Senior Secondary School, Mugappier is doing X th.Std. He started his Cricketting career in the Year 2005. He became Thiruvallur District Player in the year 2006, later he played for Combined Districts in the year 2007.In the year 2008 and 2009 he played for Tamil Nadu State under – 14 Age group. In the year 2009-2010 he took maximum wickets of 32 in the Inter-State South Zone Matches which included 2 six wickets hauls and 2 five wicket hauls. He was awarded the prestigious award of Junior School Cricketer of the year 2009 by Tamil Nadu Cricket Association. It was presented to him by **Mr.Mike Nithavrianakis**, British Deputy High Commisioner for South India in the presence of **Sri N.Srinivasan** President, Tamil Nadu Cricket Association.

Presently he is the Captain for under-16 team of Thiruvallur District. Under his Captaincy Thiruvallur District won the P.R. Thevar Trophy in the T.N.C.A. Inter District under-16 Cricket Tournament, which conculdedd recently.

Captain Aditya topped the bowling charts with 30 wickets, which included three six wicket hauls. We wish him all success in his walk of life.



**Sri N.Srinivasan** President, Tamil Nadu Cricket Association.
**Mr.Mike Nithavrianakis**, British Deputy High Commisioner
with **Aditya**

# *Wish you Happy Married Life*

## *Wedding on 04-06-2010*

Chi: **ARUN KUMAR SINGH**, B.E.

Sow: **SWETHA**, B.E.



We the parents of the bride groom and bride, convey our sincere thanks to all the well wishers, who have graced and extend greetings on the occasion of the marriage held on 04-06-2010 at Shimoga and reception held on 08-06-2010 at Bangalore.

**Parent:** Smt. **B.T. Renuka Devi**
Prof. **Dr. K. Chandrapal Singh**

Grand Parents

Smt. **Devika Bai Kesar Singh**
Banglore
Sri. **B. Kesar Singh** (Late)
Banglore

Smt. **B.T. Padmini Devi**
Sri. **M.B. Thuljaram Singh**
Chennai

## வாழ்த்துகிறோம்

**திருமண நாள்: 03-06-2010**

சௌ: **B.V. சுசிலா**
த/பெ: **G. பகவத் சிங்**
திருச்சி

சிரஞ்சீவி: **Er.N. கிருஷ்ணகுமார்**
DCE (Hons)
த/பெ: **R. நாராயணன்**
திருச்சி



இவர்களது விவாஹ சுபமுகூர்த்தம் 03-06-2010 அன்று திருச்சி - தஞ்சை ரோடு பால் பண்ணை அருகில் அமைந்துள்ள புஷ்ப மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் எங்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய நமது சமுதாய அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. N. சாந்தி
திரு. R. நாராயணன்
1-83, கோஷாய் தெரு,
ஜீயபுரம், திருச்சி
கைபேசி: 99947 64529




திருமதி. B. வசந்தி பாய்
திரு. G. பகவத் சிங்
55-A, முத்துமணி டவுன்
செந்தண்ணீர்புரம், திருச்சி
கைபேசி: 94868 97345

# வாழ்த்துகிறோம்

**திருமண நாள்: 24-06-2010**

சௌ: **M. நீட்டு** M.C.A
த/பெ: **D. மதன் சிங்**
சென்னை

சிரஞ்சீவி: **S. சத்வந்த்** M.C.A
த/பெ: **R.M. சுப்ரமண்யம்**



24-06-2010 அன்று இவர்களது விவாஹ சுபமுகூர்த்தம் சென்னை-99 பெரம்பூர் ரெட்ஹில்ஸ் சாலை, லஷ்மிபுரம், ஸ்ரீ சேகர் சேஷ மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் எங்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய நமது சமுதாய அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. S. ஜெயந்தி
திரு. R.M. சுப்ரமனியம்
கோவை

திருமதி. கல்பனா
திரு. D. மதன் சிங்
சென்னை

வாழ்த்துகிறோம்

# Wish you Happy Married Life

## Wedding on 22nd August 2010

## திருமண நாள் 22-08-2010



**Chi: V. I. Sasikumar**, M.C.A.
HCL - USA
S/o. K. Vijayakumar
S.Rly. Chennai

**Sow: R. Amritha Singh**, B.Com
D/o. S. Rajendra Singh
DGM. VRL Logistics Ltd., Hubli



We convey our sincere thanks to all the well wishers who graced and extend greetings on the occasion of the marriage on 22nd August 2010 at Hubli and the Reception heldon 03-09-2010 at Chennai.

22-08-2010 அன்று கர்நாடக மாநிலம் ஹுப்ளி நகரில் நடைபெற்ற எங்கள் இல்லத் திருமண விழா மற்றும் 03-09-2010 அன்று சென்னை, புரசைவாக்கம், M.S.R. மஹாலில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய நமது சமுதாய அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. இந்திரா தேவி
திரு. K. விஜயகுமார் சிங்
தெ. இரயில்வே,
செயலாளர், வடசென்னை கிளை
பொந்தில் சங்கம்
கொளத்தூர், சென்னை-600 099.
செல்: 09884611890/044-2556 2384



திருமதி. R. இராதா சிங்
திரு. S. ராஜேந்திர சிங்
மீரா சங்கர்
130, வாசவி நகர்
கோகுல் ரோடு,
ஹுப்ளி

# தலையங்கம்

நமது சங்கம் தொடங்கி 40 வருடங்கள் ஆகின்றன. பல இன்னல்களுக்கு இடையில் நமது சங்கம், தங்களின் அயராத உழைப்பினால் சிறுகச்சிறுக வெற்றி நடைபோட்டு பல தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளது. மேலும் சிறக்க தங்கள் ஒத்துழைப்பை இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.

திருமண வயது நிரம்பிய நமது பிள்ளைகளின் விவரங்களை வீடு வீடாக (கிராமம் மற்றும் நகரங்கள்) நேரிடையாக குறிப்பாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை கண்டுபிடித்து விரிவான பட்டியலை விலாசத்துடன் இத்துடன் இணைத்துள்ள மாதிரி படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பினால் வரும் "பொந்தில்" இதழில் பிரசுரித்து பலன் பெறலாம். சந்தா தொகை கட்ட முடியாதவர்களையும் அறிமுகப்படுத்தினால் அவர்களுக்கு உங்கள் உதவியுடன் நாங்கள் சேவை செய்ய தயாராக உள்ளோம்.

மக்கள் தொகை ஜாதிவாரியாக கணக்கெடுப்புப் பணி மத்திய அரசினால் (Government of India) நாடு முழுவதும் தொடங்கி உள்ளது தாங்கள் அறிந்ததே. ஆகவே கிராமங்கள் மற்றும் நகரத்தில் உள்ள சகோதர சகோதரிகள் வீட்டிற்கு வரும் கணக்கெடுப்பு அதிகாரியிடம் நமது இனம் பின்தங்கிய "பொந்தில்" சமூகம் என பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம். பலர் அறியாமையால் சத்திரியர், சிங், இராஜ புத்திரர் என பதிவு செய்துள்ளனர். இது தவறு. நாங்கள் "பொந்தில்" சமுதாய மக்கள் என தெரிவிக்கவும் அப்போது தான் "பொந்தில்" சமூகம் பற்றி அரசுக்கு தெரிய வரும். இது ஒரு அவசர அவசியப் பணி. தயவுகூர்ந்து துரிதமாக செயல்படவும் அவரவரர்களுக்கு தெரிந்த உறவினர்களிடம் பொந்தில் ஜாதி என பதிவு செய்யும்படி கூறவும்.

சென்னையில் நமது சமுதாயத்தவருக்கு சமூக நலக்கூடம் ஒன்றினை ஏற்படுத்திட வேண்டி, மறைந்த நமது பாசமிகு முன்னாள் தலைவர் அமரர் திரு.பா. கோவிந் சிங்ஜி அவர்கள் முயற்சியினால் சென்னை, தாம்பரத்திற்கு அருகில் இரும்புலியூரில் 11 செண்ட் நிலம் வாங்கி உள்ளது தாங்கள் அறிந்ததே. தற்பொழுது அங்கு சமூக நலக்கூடம் அமைக்க வேண்டி மாநிலத்தலைவர் திரு. ஆர் பாபு கோவிந்த சிங் அவர்கள் அதற்கான முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். ஆகவே தங்கள் ஒத்துழைப்பும் ஆலோசனையும் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 25,000/- க்கு கீழ் உள்ளோரின் பிள்ளைகளுக்கு (குடும்ப அட்டையின் நகல் இணைக்கவும்). மணமகன் / மணமகள் கிடைத்திட எண்ணி, அவர்கள் விவரங்களை இலவசமாக பதிவு செய்து பொந்தில் இதழில் அச்சிட உள்ளோம். தலைமை சங்கத்தினை கைபேசி மூலம் தொடர்பு கொண்டு பயன் பெறவும். இதழ் வெளியான உடனே பெற விரும்பும் உறுப்பினர்களுக்கு இதழினை தபால் மூலம் அனுப்பி வருகின்றோம். அதன்படி இதழ்பெற விருப்பம் உடையவர்கள் ரூ.500/- அல்லது அதற்கு மேலும் நன்கொடை அனுப்ப விருப்பமுள்ளவர்கள் "பொந்தில் அசோசியேஷன்" என்ற பெயரில் காசோலை எடுத்து பொந்தில் சங்கம் (தலைமை) 38/40, குப்புமுத்து தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். கிளைகள் பொதுக்குழு கூட்டத்தை கூட்டி திருமண வயது நிரம்பப் பெற்றவர்கள் விவரத்தினை படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவும். வரும் அக்டோபர் மாதம் 3ம் தேதி தேசிங்கு ராஜனின் நினைவு நாள்விழா நடத்தும்படி கிளைகள் தமிழக முதல்வருக்கு தந்தி மூலம் தகவல் கொடுக்கவும்.

மாநில சங்கத்தின் சார்பாக வரும் 3.10.2010 அன்று காலை 10மணி அளவில் செஞ்சி நகரம் சென்று தேசிங்கு ராஜனின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த உள்ளோம். அன்றைய தினம் மற்ற கிளை நிர்வாகிகளும் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வரும் 10.10.2010 அன்றுபிற்பகல் 3 மணி அளவில் பொதுக்குழு கூட்டம் சென்னையில் விலாசம் நம்பர் 7, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005 என்னுமிடத்தில் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்துக்கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**மேலும் விவரங்கள் பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

தலைவர் R. பாபு கோவிந்த் சிங்,
செயலாளர் - எம்.பி. கிருஷ்ண சிங்
38/40, குப்புமுத்து தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

தொடர்புகொள்ள வேண்டிய கைபேசி 9444070048 தலைவர் 9940217113 செயலர் தங்கள் அன்பான பதிலை எதிர்பார்க்கிறோம்.

நன்றி வணக்கம். இப்படிக்கு

**R. பாபு கோவிந்தசிங். மாநில தலைவர்.**

---

**சென்னை வடக்கு கிளையின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் ஸ்ரீ சத்திய நாராயண ஸ்வாமி பூஜை வரும் 21.11.2010 அன்று மதியம் 3.00 மணிக்கு சென்னை - பெரம்பூர் புதிய மேம்பாலம் அருகில் யூனிட்டி ஹவுஸ் எனுமிடத்தில் நடைபெற உள்ளது. உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு இறையருள் பெறும்படி அன்புடன் வேண்டுகிறோம்.**

**செயலாளர், வட சென்னை கிளை**

---

*புகழை எதிர்பார்த்து பிறருக்கு நன்மை செய்யாதீர்*

**தமிழ்நாடு பொந்தில் சங்கம் செஞ்சி இராஜாதேசிங்கு மாவட்ட கிளை,விழுப்புரம் கிளையின் சார்பாக கிளை செயலாளர் திரு. நா. இராஜாராம் சிங், எண்.138, இராஜாதேசிங்கு தெரு, சுதாகர் நகர், விழுப்புரம் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய மனு**

அய்யா,

பொருள் : செஞ்சிக்கோட்டையில் தேசிங்கு ராஜனின் நினைவு நாள் நடத்துவது குறித்து தமிழக முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய வேண்டுகோள்

----------

வணக்கம்,

கடந்த சில வருடங்களில் சரித்திர புகழ்பெற்ற செஞ்சிக் கோட்டையில் மாவீரன் இராஜாதேசிங்கின் நினைவு நாள் விழா தமிழக அரசின் விழாவாக கொண்டாடப்பட்டதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விழைகிறேன். செஞ்சிக்கோட்டை கடலியில் இராஜாதேசிங்கு மற்றும் நண்பன் மகமத்கான் சமாதி அமைந்துள்ள இடத்தில் நினைவு மணிமண்டபம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்தும் இதுநாள் வரை தொடர் நடவடிக்கை இல்லை என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செஞ்சி நகர மக்களின் நல்வாழ்வும் நகர முன்னேற்றமும் குறிக்கோளாக கொண்டு வீரத்துடனும் - தன்மான உணர்வுடனும், மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கிய எங்கள் "பொந்தில்" சமுதாய நாயகன் இராஜாதேசிங்கின் வம்சா வழியினர் சார்பில் கீழ்காணும் கோரிக்கைகளை தங்களின் நடவடிக்கை வேண்டி பணிவன்புடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

1. சரித்திர புகழ் பெற்ற இராஜாதேசிங்கின் நினைவு நாள் விழாவை செஞ்சிக்கோட்டையில் ஆண்டுதோறும் அக்டோபர் 3ம் நாள் தொடர்ந்து அரசு விழாவாக கொண்டாட வேண்டும்.
2. செஞ்சிக்கோட்டை - கடலியில் இராஜாதேசிங்கு - அவரது நண்பன் மகமத்கான் சமாதியில் மணி மண்டபம் அமைத்து பராமரிக்க வேண்டும்.
3. செஞ்சிக் கோட்டையின் நுழைவு வாயில் (அ) கூட்டு ரோடில் இராஜாதேசிங்கின் சிலை அமைக்க வேண்டும்.
4. செஞ்சிக் கோட்டையை சுற்றுலா மையமாக அறிவிக்க ஆவண செய்ய வேண்டும்.
5. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சிதறி வாழ்ந்து வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாடும் "பொந்தில்" சமுதாய மக்களுக்கு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும்.

நன்றி வணக்கம்.

**ஒப்பம் (நா. இராஜாராம் சிங்)**

---

# கல்வி உதவித் தொகை வேண்டி மனு

அனுப்புதல்

A. பிரவின் சிங்,
த/பெ. அசோக் சிங், 88/56, காமராஜ் நகர் மேற்கு,
ஊத்தங்கரை (அஞ்) 635207 கிருஷ்ணகிரி மாவட்டம்
செல் : 90955 16373

மேலே கண்ட விலாசத்தில் வசித்து வருகிறோம். எனது தகப்பனார் ரேடியோ பழுது பார்க்கும் தொழில் செய்து வருகிறார். எனது தாயார் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு மின்சாரம் தாக்கி இறந்து விட்டார். எனக்கு +2 படிக்கும் தங்கை உள்ளார். நான் ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1200-க்கு 1046 மதிப்பெண்கள் வாங்கி தேர்ச்சிப் பெற்றேன்.

எங்களது குடும்பம் போதிய வருவாய் இன்றி மிகவும் ஏழ்மையான சூழ்நிலையில் வசித்து வருகிறோம். அரசின் கலந்தாய்வில் கலந்துக்கொண்டு நாமக்கல்லில் உள்ள ஞானமணி தொழில்நுட்பக் கல்லூரியில், தற்சமயம் (Gnanamani College of Technology) பொறியியல் இரண்டாமாண்டு படித்து வருகிறேன். எனது தங்கையும், என்னையும் படிக்க வைக்க எனது தந்தையார் மிகவும் சிரமப்பட்டு வருகிறார். ஏழ்மையான சூழ்நிலையிலும் பொறியியல் படித்து நல்லமுறையில் முன்னேற வேண்டும் எனக் கருதி தங்களிடம் கல்வி உதவி கேட்டு இந்த மனுவை தங்களுக்கு அளித்துள்ளேன். தங்களால் இயன்ற உதவித்தொகையினை வழங்கி தொடர்ந்து பொறியியல் பயிலுவதற்கு உதவிடும்படி தங்களை பணிவன்புடன் வேண்டுகிறேன்.

**"சிறு துளி பெரு வெள்ளம்" - ஆம்,** இம்மாணவனின் வாழ்வில் ஒளியேற்றிட கருணை உள்ளம் படைத்த நல் இதயங்களே, தங்களால் இயன்ற உதவியினை மாணவனின் விலாசத்திற்கு நேரிடையாக அனுப்பி உதவிடவும் இறைவன் குறைவில்லா வாழ்வும் மனமகிழ்ச்சியையும் என்றும் அளிப்பார்

தலைமைச் சங்கம்.

*பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும் சக்தி படைத்தது*

## உதவியவரை உதாசினம் செய்யலாமா?

ஒரு மரத்தில் பல பறவைகள் பாதுகாப்பாகத் தங்கின. அது ஒரு பழமரம் என்பதால், வேண்டிய அளவு பழங்களைச் சாப்பிட்டு சந்தோஷமாக காலம் கழித்தன. எந்த ஒரு பொருளுக்கும் உலகில் ஆயுள் நிர்ணயம் உண்டு. சில நூறு வருடங்கள், பல தலைமுறை பறவைகள் அதில் வசித்தன. ஒரு சமயம் மரம் பட்டுப் போனது. எல்லாப் பறவைகளும் அதில் இருந்து வேறு மரங்களைத் தேடிச்சென்று விட்டன. ஒரு கிளி மட்டும் அந்த மரத்தை விட்டு அகலவில்லை. உணவின்றியும், நிழலின்றியும், பாதுகாப்பின்றியும் சிரமப்பட்டாலும் கூட அவற்றை பொறுத்துக்கொண்டு அங்கேயே வசித்தது.

ஒரு சமயம், தேவர்களின் தலைவன் இந்திரன் அங்கு வந்தான். கிளியிடம் பச்சை மரங்கள் பல இருக்க, பட்ட மரத்தில் தங்கியிருக்க காரணம் கேட்டான். "இந்திரரே! எனது மூதாதையர் இங்கு தான் வசித்தனர். அவர்கள் அனைவருக்கும் இந்த மரமே உணவும் அடைக்கலமும் தந்தது. அந்த நன்றியை எப்படி என்னால் மறக்க இயலும்! எங்களை வளர்த்த இந்த மரத்திற்கு இப்போது கஷ்டம் வந்ததும், அதை கைவிட்டுப் போனால் நன்றி மறந்தவன் ஆகமாட்டேனா? என்றது.

இந்திரன் மகிழ்ந்தான். அந்த கிளியிடம், "உன் நல்ல மனதுக்கு வரம் தருகிறேன். கேள்", என்றான். "இந்த மரம் மீண்டும் பசுமையுடன் திகழ வேண்டும். முன்பை விட செழித்து நிறைந்த கனிகளுடன் விளங்க வேண்டும் என்றது கிளி. இந்திரனும் அவ்வாறே செய்தான். பிறர் செய்த உதவியை ஏற்றவர்கள் அவர்களுக்கு கஷ்டம் வரும்போது கைகொடுத்து காக்க வேண்டும் என்பது இந்தக் கதை சொல்லும் நீதி.

இதனை கருத்தில் கொண்டு உறுப்பினர்கள், தங்கள் மகன்/மகள், ஆகியோருக்கு வரன் கிடைக்கும் வரை சங்கத்திற்கு அடிக்கடி வருவதும் திருமணம் நடந்தபின் சங்கத்தினை மறவாது தன்னால் இயன்ற நன்கொடையினை வழங்கி உதவி செய்தால் மணமக்கள் எவ்வித குறையும் இன்றி நீடுழி இறைவன் அருளால் வாழ்வர்.

## ராஜா தேசிங்கு நினைவு நாள்

03.10.2010 அன்று செஞ்சி நகரில் ராஜாதேசிங்கு நினைவு நாள் விழா காலை 10 மணிஅளவில் செஞ்சி கூட்ரோட்டில் மாநிலத் தலைவர் திரு. ஆர். பாபு கோவிந்தசிங் தலைமையேற்று துவக்கி வைத்தார். பின் அங்கிருந்து ராஜா தேசிங்கு உயிர் நீத்த இடமான கடலி கிராமத்திற்குச் சென்று ராஜா தேசிங்கு நினைவிடத்தில் மலர்கள் தூவி, மலர் வளையம் வைத்து ராஜா தேசிங்கு வம்சா வழியினர் பொந்தில் சமூகத்தின் சார்பாக மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர். திரு. மஸ்தான் அவர்கள், கடலி பஞ்சாயத்து தலைவர், செஞ்சி நகர வட்டாட்சிரியர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ராஜா தேசிங்கு நினைவு நாள் விழா தமிழக அரசு சார்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தமிழக அரசின் சார்பாக தமிழக பொந்தில் சங்க மாநிலத் தலைவருக்கு செஞ்சி நகர பேரூராட்சித் தலைவர் திரு. மஸ்தான் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்கள்.

ராஜா தேசிங்கு நினைவு நாள் விழாவினை அரசு ஆண்டுதோறும் நடத்த வேண்டும் என பொந்தில் சங்க மாநிலத் தலைவர் கேட்டுக் கொண்டார்கள்.இவ்விழா சிறப்புற நடைபெற செஞ்சி ராஜா தேசிங்கு மாவட்டக் கிளை செயலாளர் திரு. நா.இராஜாராம்சிங் பெரு முயற்சி எடுத்து செய்து கொடுத்தார்கள். அவருக்கு தலைமைச் சங்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விழாவில் தலைமை சங்க காப்பாளர் திரு.கோ.பாலாஜி சிங் இணைசெயலாளர். ஆர்.நாகராஜ்சிங், இணைபொருளாளர். திரு.ஆர்.பிரேம் நாராயண் சிங், வேலூர் கிளைத் தலைவர் திரு. M.R. குமார் சிங், கோவை கிளை செயலாளர். V. சுரேஷ்பாபு, விருத்தாசலம் கிளை செயலாளர் திரு.சிவாஜிசிங், கள்ளக்குறிச்சி கிளைத் தலைவர்.திரு.தரம்சிங், மணலூர்பேட்டையைச் சேர்ந்த திரு.அன்பரசன், வடசென்னை கிளை செயலாளர் திரு.K.விஜயகுமார்சிங், நம் சமுதாய மக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அனைவருக்கும் தலைமைச் சங்கத்தின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- தலைமைச்சங்கம்

## Rememberance

### *B.G. Leeladhar Singh* (Bangalore)

**24.03.1939 - 17.7.2010**



Attained Lords Feet on 17th July 2010 at 00.10 hrs. on his way to Amarnath Cave at the Amarnath yatra Base Camp, Baltal Jammu Kashmir. May His Soul Rest in Peace. He served in various organisation throughtout his life. viz.,

1. Ex-vice President, Rajput Maha Sabha, Bangalore
2. National President, Akhila Bharatiya Kshatriya Maha Sabha, New Delhi.

Bondil Association HQ, Chennai

## இரங்கல் செய்தி

### திருமதி. R. கஸ்தூரி பாய்



முன்னாள் மாநிலத் தலைவர் அமரர். திரு. பா.கோவிந்த் சிங் அவர்களின் மருமகளும், திரு.G.ராம்ஜிசிங் அவர்களின் துணைவியாரும், திரு. R. குமார் சிங் மற்றும் R. ராஜு சிங் அவர்களின் அன்புத் தாயாருமான **திருமதி. R. கஸ்தூரி பாய்** அவர்கள் 22.09.2010 அன்று சென்னையில் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

*********

# வாழ்க மணமக்கள்

கீழ்கண்ட மணமக்களின் திருமணங்கள் பொந்தில் திருமண மையத்தில் பதிவு செய்து இதழில் வெளியாகிய பின் இறைவன் அருளால் நலமுடன் நடந்தேறியது.

***மணமக்கள் எல்லா நலமும் பெற்று வாழ இறைவனை வேண்டுகிறோம்.***

| | | |
|---|---|---|
| 1. கரண்சிங் | த/பெ. | சஜன்ராஜ் சிங், சென்னை |
| 2. சாய்ராஜ் சிங் | | K. கோவர்தன் சிங், பெங்களூர் |
| 3. விக்னேஷ் | | சுந்தர்லால், சென்னை |
| 4. பிரசாத்சிங் | | H. ராஜாராம் சிங், திருவண்ணாமலை |
| 5. நாகராஜ்சிங் | | யாஷ்பால் சிங், பட்டாபிராம் |
| 6. Dr. D. விஜயராஜ்சிங் | | Dr. தேவிசிங்,புதுக்கோட்டை |
| 7. M. ஜானகிராம்சிங் | | மஹாபீர்சிங், சென்னை |
| 8. பிரதீப்குமார் | | ராமகிருஷ்ணலால், சென்னை |
| 9. N. களிசரன் | | G. நர்சிங், சென்னை |
| 10.K.I. சசிகுமார் சிங் | | K. விஜயகுமார்சிங், சென்னை |
| 11. M. வினோத்குமார் | | R. மோகன்சிங், சென்னை |
| 12. G.R. சைலேந்தர் சிங் | | R.G. ராஜேந்தர் சிங், சென்னை |
| 13. கரிஷ்மா சிங் | | V.J. ராஜேந்தர்சிங், சென்னை |
| 14. ரூப்கிரண் | | Y. சுதாகர்சிங், நெல்லூர் |
| 15. ரம்யாபிரியா | | L.R.C. சிங், ஒட்டபாலம் |
| 16. Dr. ஜனனி | | R. சங்கர்சிங், மதுரை |
| 17. சசிரேகா | | R.C.B. சிங்,காவலி AP |
| 18. சுப்ரஜா | | A. நாகராஜ் சிங்,காவலி AP |
| 19. ஜனனி | | குருராஜ்சிங், காஞ்சிபுரம் |
| 20. ராஜலஷ்மி | | சரஸ்வதிபாய், பொழிச்சலூர் |
| 21. I. வினோத் சிங் | | S. இந்தர்சிங்,சென்னை |
| 22. ஐஸ்வர்யா | | உபேந்தர்பாபு, வேலூர் |
| 23. அசோக்குமார் சிங் | | லஷ்மண் சிங்,பெங்களூரு |
| 24. P. சந்திரபான் சிங் | | A. பிரித்திவிராஜ் சிங், பாண்டி |
| 25. G. பிரியா | | கஜேந்திர சிங்,விருத்தாசலம் |

**During the past three months the following marriages were fixed/After Publishing their names through this Magazine.. We wish them and pray God to give prosperity, better future & peaceful life.**

1. Karan Singh S/o Sajanraj Singh, Chennai
2. Sairaj Singh S/o.Govardhan Singh Bangaluru
3. Vignesh S/o.Sunderlal, Chennai
4. Prasath Singh S/o.Rajaram Singh,Tiruvannamalai
5. Nagaraj Singh S/o.Late. Yashpal Singh,Pattabiramam
6. Dr.D.Vijayraj Singh,S/o.Er. Devi Singh, Pudukottai
7. M.Janakiram Singh,S/o. Late Mahabir Singh,Chennai
8. Pradeep Kumar S/o. Ramakrishna lal,Chennaii
9. N. Kalicharan S/o. Nar Singh ,Chennai
10. K.I.Sasikumar Singh S/o. K. Vijayakumar Singh,Chennai
11. M.Vinoth Singh S/o. R.Mohan Singh,Chennai
12. G.R.Salender Singh S/o.R.G.Rajendra Singh,Virudhachalam
13. Ashok Kumar Singh S/o.Lakshman Singh,Bangaluru
14. Charishma Singh D/o.V.J.Rajender Singh,Chennai
15. Roopkiran D/o. Sudhakar Singh,Nellore, AP.
16. Remya Priya D/o. L.R.C.SinghOttapalem,Kerala
17. Dr. Janani D/o. Sankar Singh,Madurai
18. Shasirekha D/o. R.C.B. Singh,Kavali AP.
19. Supraja D/o. Nagaraj Singh,Kavali AP
20. Janani D/o. Gururaj Singh, Kanchipuram
21. Rajalakshmi D/o. Saraswathi Bai,Pozhichalur
22. I. Vinod Singh, S/o. S. Inder Singh, Chennai
23. U. Iswaraya,D/o. Uppendara Babu, Vellore
24. G. Priya D/o. Gajendra Singh, Virudhachalam
25. P. Chandraban Singh, S/o. A. Prithiviraj Singh,Pondy

இதில் வ. எண். 11 திரு. R.மோகன்சிங்,சென்னை மற்றும் வரிசை எண்.24. A. பிரித்திவிராஜ் சிங், பாண்டி அவர்கள் சங்க வளர்ச்சிக்கு தலா ரூ.1000/- நன்கொடை வழங்கியுள்ளார்கள். அவருக்கு சங்கத்தின் சார்பாக நன்றி, மற்ற பெற்றோர்கள் நமது மகன் / மகளுக்கு திருமணம் நடந்து விட்டது. இனி நமக்கு சங்கத்தின் உதவி வேண்டியதில்லை என்று எண்ணாமல் சங்கத்திற்கு உங்களால் இயன்ற நிதி உதவிசெய்து சங்கத்தினை வளர்த்திடுங்கள். அப்போது தான் உங்கள் இல்லம் சுபிட்சமாக இருக்கும்.

**செஞ்சி இராஜா தேசிங்கு மாவட்டக் கிளையின் புதிய ஆயுள் உறுப்பினர்**

1. **திரு. சூ.இரஞ்சித்சிங்,** எண்.37 A,இமயம் தெரு, N.G.G.O காலனி, சாலமேடு,விழுப்பரம் - 605 402 கைபேசி : 98941 25921
2. **திரு. M.R. ரவிச்சந்திரன் சிங்,** எண்.12B, முத்துதெரு,காஞ்சனா இல்லம், கிருஷ்ணாபுரம், செஞ்சி - 604202 கைபேசி : 93803 38884
2. **திரு. B. ஷியாம்பாபு சிங்,** எண்.34/91, மெயின்ரோடு, புதுப்பாளையம், கடலூர் - 607001 கைபேசி : 99430 78085


## GOLDEN OPPORTUNITY FOR STUDENTS

The Engineering Books relates to EEE and ECE are available. Interested Candidates Contact and avail the Golden Opportunity.

**Contact : Cell : 9840203565**

For Medical Books Please Contact
Cell : 94440 70048

## வாழ்த்துகிறோம்

**திருமண நாள்: 23-08-2010**

சிரஞ்சீவி: **P. சந்திரபான் சிங்** B.E.,M.B.A.
த/பெ: **A. பிரித்திவிராஜ்சிங்**
பாண்டிச்சேரி

சௌ: **Dr.K. ஜனரஞ்சனி**
த/பெ: **R. கிருஷ்ணசிங்**
திருப்பூர்



23-08-2010 அன்று இவர்களது விவாஹ சுபமுகூர்த்தம் திருப்பூர் காங்கேயம் சாலை, காயத்திரி மஹாலில் நடைபெற்றது. அவ்வமயம் எங்களின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய நமது சமுதாய அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. **P. குமாரி**
திரு. **A. பிரித்திவிராஜ் சிங்**
பாண்டிச்சேரி. செல்: 98943 47567



திருமதி. **K. சரஸ்வதிபாய்**
திரு. **R. கிருஷ்ண சிங்**
திருப்பூர்

வாழ்த்துகிறோம்



## திருமண நாள்: 12-09-2010

சிரஞ்சீவி: **G.R. சைலேந்தர் சிங்,** B.E., (CTS, USA)
த/பெ: **R.G. ராஜேந்திர சிங்**
சென்னை

சௌ: **G. பிரியா,** B.E.,
த/பெ: **B. கஜேந்திர சிங்**
விருத்தாசலம்



12-09-2010 அன்று விருத்தாசலம் நகரில் திருமலை திருச்சானூர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற எங்கள் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திய நமது சமுதாய அன்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் எங்களின் இதயம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி. R. சோபனாதேவி
திரு. R.G. ராஜேந்திர சிங்
பொருளாளர்: Hony Treasurer
பொந்தில் சங்கம், (தலைமை)
பிளாட் எண்.23, கண்ணன் நகர் 2வது தெரு,
குரோம்பேட், சென்னை-44.


திருமதி. G. சக்திபாய்
திரு. B. கஜேந்திர சிங்
12/197-B, பழமலை நகர்,
விருத்தாசலம்

# Wish you Happy Married Life

## Wedding on 12-09-2010

**Chi: R. Varun, B.E.**
S/o. R.Ravichandran,
Shell, Russia

**Sow: N. Kavitha, M.Sc**
D/o. R.Nagaraj Singh
Singer India Ltd., Chennai (Retd.)



We the parents of the bride groom and bride, convey our sincere thanks to all the well wishers, who have graced and extend greetings on the occasion of the marriage held on 12-09-2010 at Kalyani Thirumana Mandapam , Chennai-87.

**Smt. Jayanthy Nagaraj**
**Sri. R. Nagaraj Singh**
No. 137, Flat No. 2-A/4,
9th Cross Street, Nethaji Colony,
Velachery, Chennai - 600 042.

**Smt. R. Hemaprabha Ravichandran**
**Sri. R. Ravichandran**
No. 73, Indra Gandhi Street,
Prajwal Classic,
Saligrammam, Chennai - 600 093.

சங்கத்தின் வளர்ச்சிப் பணிகளில் உறுதுணையாக இருக்கும்
இவர்களை சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்.

**Wish you Happy Deepavali!**

## Er.G. Anantha Narayana Singh

Managing Director

# M/s. MANO BUILDERS



Civil Engineers, Builders &

Interior Decorators

No.10. New Katpadi Road,
(Near Hotel River view) Vellore - 632 004
Ph : Off : 0416 - 2223738
Mobile : 94432 45289

# தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## திரு. பூ. ராம்சிங்

துணை ஆட்சியர்(ஓய்வு)

12, அப்துல் ரசாக் தெரு,
பல்லாவரம், சென்னை – 600 043
தொலைபேசி – 22643951

நேர்மையானவனுக்கு இருட்டிலும் வெளிச்சம் கிடைக்கும்

# கோயம்புத்தூர் கிளையின் 27வது ஆண்டு விழா

27ம் ஆண்டு விழாவிற்கு தலைமையேற்க வந்துள்ள மாநில தலைவர்திரு. பாபு கோவிந்சிங், பொதுச்செயலாளர் திரு. M.B.கிருஷ்ணசிங், சிறப்பு விருந்தினர்கள் திரு.பிரேம் தத்தா சரஸ்வதி, (சிட்பி வங்கியின் வட்டார மேலாளர்) திரு. N. ஜனார்த்தன் சிங் (திண்டுக்கல் மாவட்ட காவல்துறையில் உயர்பதவி வகிப்பவர்) எங்களை வழி நடத்திச் செல்லும் அன்புத் தலைவர் திரு. C.M. சிவராம் சிங் எங்கள் சங்கத்தின் விடிவெள்ளி மண்டல செயலாளர் திரு. B.அர்ஜுன்சிங்,

சங்கத்தின் வளர்ச்சிக்கு ஆஸ்தான நீதியரசராய் இருந்து கணக்குகளை கையாண்டு வரும் கூட்டுறவு வங்கியின் மேலாளருமான திரு. N. உமாநாத்சிங். எத்தனையோ இடர்பாடுகளுக்கிடையேஎங்களுடன் தோளோடு தோள் நின்று பணியாற்றி வரும் பள்ளியின் தாளாளரும், சங்கத்தின் சட்ட ஆலோசகருமான வழக்கறிஞர் திரு. S. யுவராஜ்சிங்,

உறங்கிக் கிடந்த சங்கத்திற்கு புத்துயிர் கொடுத்து புதுமைகள் பல படைத்திட,புதுமைக் கல்வியின் திட்ட ஆலோசகருமான இணை செயலாளர் திரு. ஹரீஷ்சிங், கோவையின் மையப் பகுதியிலே 16 செண்ட் இடம் அருளிய தர்மவர்த்தனா உபதலைவர் திருமதி. ராதாபாய் நாராயணசாமி, அந்த இடத்தில் கோயில் கட்ட நிதியுதவி அளித்த உதவி செயலாளர் திரு. S. கௌரிசங்கர் சிங்,

சங்கத்தின் முக்கிய விழாக்களுக்கு இலவசமாய் இடம் கொடுத்து வரும் உபதலைவர் சிருஷ்டிமஹால் திரு.S.மனோகர்சிங், குழந்தைச் செல்வங்களின் கல்விக்கென ஒரு நிதியினை ஏற்படுத்தி கல்விக்கண் திறந்த திருப்பூர் மாவட்ட செயலாளர் திரு. S. குலாப்சிங், அவருக்கு துணையாய் நின்று இடம் அருளிய திரு. பவானி சிங் பேரனும், திரு. சுரேந்தர்சிங் மகனுமான திரு.சங்கர்சிங், அவருக்கு உதவியாய் இருந்து வரும் கிளை நிர்வாகிகள்.

பொள்ளாச்சி உடுமலை மற்றும் ஆனைமலை பகுதியில் உள்ள நம் இனத்தாரின் முகவரிகளைத் தந்து அவர்களுடன் தொடர்பு கொண்டு வரும் பொள்ளாச்சி திரு. சேகர்சிங், கிளையினை தொடங்க ஆயத்தமாக பெரியார் மாவட்டத்தில் அங்கு உள்ள நமது இனத்தாரின் 103 முகவரிகளை பெற்றுத் தந்த தமிழ் ஆசிரியர் திரு.நா. ராஜா ராம்சிங்,

சேலம் கிளைக்கு உயிர் கொடுத்து நம் இனத்தாரை ஒன்றிணைக்க அரும்பாடுபட்டு வரும் செயலாளர் திரு.விக்ரம்சிங் பொருளாளர் திரு.கபில்சிங், மேட்டுப் பாளையம் கிளையினை தொடர்ந்து பலப்படுத்தி எங்களுக்கு துணையாய் நிற்கும் தலைவர் திரு. கோபால்சிங் 'அழைத்தவர் குரலுக்கு வருவேன் என்றான் கீதையிலே கண்ணன்' அழைக்காமலேயே வந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு அனுதினமும் தொடர்பு கொண்டு பணியாற்றி வரும் நிர்வாகிகள். குறிப்பாக திரு. மனோஜ்சிங், திரு.மோகன்சிங், திரு. தாமோதரன் சிங் மற்றும் திருமதி. ராதாபாய் நாராயணசாமி.

இப்படிப்பட்ட நல்ல உள்ளங்கள் கிடைக்கப் பெற்றதால் மட்டுமே சங்கத்தில் பல சாதனைகளை செய்ய முடிந்தது. அதில் ஒரு சில மனித்துளிகள்:

சென்ற ஆண்டில் நாங்கள் நடத்திய நிர்வாகக் குழுக்கூட்டம் 13. அதுபோக சத்ய நாராயண பூஜை, ஸ்ரீ துர்கை அம்மன் பூஜை, ஹோலிப்பண்டிகை இவற்றை அனைவரின் மனநிறைவோடு நடத்தி முடித்தோம்.

புதுமை நிகழ்ச்சியாய் குழந்தைகளுக்கான எதிர்கால கல்விகுறித்த கருத்தரங்கு ஒன்றினை அறிவு சார்ந்தவர்களை இடம்பெறச்செய்து மிகவும் நேர்த்தியுடன் மாநிலத் தலைவர் திரு. பாபுகோவிந்சிங் முன்னிலையில் நடத்தினோம். அதே நாளில் அரசாங்க உயர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற இருவருக்கு பாராட்டு விழா நினைவுப் பரிசுடன் அவர்களை கௌரவப்படுத்தினோம். குழந்தைகள், பெரியவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் அதே நாளில் நடத்தி பரிசுகள் வழங்கி சென்ற ஆண்டின் நிகழ்வுகளை வெற்றியுடன் நிறைவு செய்தோம்.

இவ்வாண்டில் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம். அதில் ஒரு சில துளிகள் : இணை செயலாளர் திரு. ஹரீஷ்சிங் அவர் தம் சகோதரர் திரு. கணேஷ்சிங் (அச்சகம்) இவர்கள் முயற்சியால் தமிழ்நாடு முழுவதும் உள்ள நமது அங்கத்தினரின் முகவரிகளை தயார் செய்து விளம்பரங்களுடன் கையேடு ஒன்றினை குறைந்த விலையில் வெளியிட முடிவு செய்து அந்தந்த மாவட்ட நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு விரைந்து செயல்பட உள்ளோம்.

செயலாளர் திரு. V. சுரேஷ்பாபு சிங் அவர்களின் பெற்றோர்கள் நினைவாக, இவ்வாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஒரு குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் படிப்பு மற்றும் திருமணச் செலவுக்கென நிதி ஒன்றினை கொடுக்க பொறுப்பேற்றுள்ளோம்.அன்றைய தினம் மஹாராணா

*மனம்,வாக்கு, காயத்தால் பிறருக்கு நன்மை மட்டும் செய்யுங்கள்*

பிரதாப்சிங் ஜெயந்தியும் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக திரு. P.D. சரஸ்வத் ஜி SIDBI. சென்னை மற்றும் திரு. N. ஜனார்தன் சிங் ஜி. கண்காணிப்பாளர், கடலூர் மாவட்ட காவல்துறை ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநிலத்தலைவர் திரு. R. பாபு கோவிந்த் சிங் மற்றும் பொது செயலாளர் திரு. M.B. கிருஷ்ணாசிங் அவர்கள் தலைமையேற்க கிளையின் துணை தலைவர் திரு. பிரதாப்சிங் நர்குந்த் அவர்கள் முன்னிலை வகித்து வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்கள்.

மாநிலத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் பேசும்போது முதலில் நாம் நமது தாய்மொழியில் பேச கற்றுக்கொள்ள வேண்டும். கிளை தற்போது மாபெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. பாராட்டுதலுக்குரியது. கிளை நிர்வாகிகளுக்கு எங்களின் நல்வாழ்த்துக்கள் மேலும் சிறப்புடன் செயல்புரிய பிரார்த்திக்கின்றோம்.

திரு. P.D. சரஸ்வத் ஜி அவர்கள் தனது உரையில் பிறருக்கு கொடுத்து வாழ்பவர்கள் தெய்வத்திற்கு சமமானவர்கள். அவர்கள் வாழ்வில் சந்தோஷம் என்றும் நிறைந்திருக்கும். எவ்வித குறையுமின்றி வாழ்வர். காயத்திரி வித்யா கற்பவர்களுக்கு இருதயம், உடல் பலம் பெற்றிருக்கும் ஆதலால் எல்லோரும் கொடுக்க கற்றுக் கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கினார்.

அடுத்தபடியாக திரு. மனோகர்சிங் கோயம்புத்தூர் அவர்கள் பேசுகையில் சொல்வதை நிதானமாக, தைரியமாக சுருங்கச் சொன்னால் மனதில் புரியும் என்றார்கள். திரு. N. ஜனார்தன்சிங் அவர்கள் பேசும்போது அரியானா மாநிலம் குருக்ஷேத்திராவில் இருந்து தற்போது தமிழ்நாட்டிற்கு வந்து பணிபுரிகின்றேன். இங்குள்ள மக்களை சந்திக்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது என கூறினார்கள். எல்லோரும் நலமுடன் வாழ வாழ்த்தினார்கள்.

கல்லூரி மேற்படிப்புக்காக சென்ற ஆண்டில் உதவி கேட்டு வந்துள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஒரு மாணவருக்கு ரூ.20,000/- பணம் கொடுக்க முன் வந்துள்ள உபதலைவர் திரு. S. மனோகர்சிங் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், மேலும் பல சாதனைகளை செய்திட தொடர்ந்து எங்களுக்கு பேருதவியாய் இருந்து வரும் கிளை நிர்வாகிகள் பிற மாவட்ட நிர்வாகிகள் அனைவர்க்கும் நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

சங்கத்தை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்ல அனைவரும் உறுதி பூண்டு உழைப்போம்.நன்றி

செயலாளர். திரு. V. சுரேஷ்பாபு சிங்

# வாழ்த்துப்பாடல்

*நிலவணைத்த வானமதில் பளபளக்கும் ஒளிச்சுடராய்*
*இலங்கு செந்தமிழாம் எந்தமிழே வாழியவே!*
*சிறுவாணிச் சிறப்பு சீமையே! பஞ்சாலை நகரமே!*
*செம்மொழி மாநாடு கண்ட சீர்மிகு நகரமே!*
*கோவையில் இன்று பொந்தில் சமுதாயக் கொண்டாட்டம்!*
*தேவை பல என்று தேடி வந்தோர் கூட்டம்!*
*விண்ணை முட்டும் மாடமாளிகை மாநகரமே - உன்*
*மண்ணைத் தொட்டு உன்னை வணங்குகிறேன்.*
*வெள்ளிவிழாமுடிந்துவைரவிழாக்காணும்கோவை செயல்வீரர்களே!*
*உங்களுக்கு என் முத்தான முதல் வணக்கம்.*
*ஈரோட்டிற்கு விடியல் பிறந்திருக்கிறது விழி திறக்க - நல்ல*
*வழிகாட்ட நாங்கள் இருக்கிறோம் என உறுதி கூற நீங்கள் தயார்தானே!*
*விழா என்றாலே நிகழ்ச்சிக்கு சிறப்புதானே!*
*விழா சிறப்பு நாயகன் **பிரேம்தத்தா** அவர்களே!*
*வாழ்க!வாழ்க! வாழிய பல்லாண்டு!*
*இந்திய நாட்டிற்கு உழைத்த பாபுஜி இல்லை இன்று!*
*பொந்தில் சமுதாயம் தழைக்க நம் பாபுஜி இருக்கிறார் நன்று!*
*ஆணிவேர் அருகிலிருக்க அச்சம் எதற்கு!*
*நீவிர் வாழ்க பல்லாண்டு!*
*காவல் துறையே துணையாக களிப்புடன் இருக்க*
*கவலை நமக்கெதற்கு இன்பம்தானே!*
*துணை கண்காணிப்பாளர் **"ஜனார்த்தன சிங்"** அவர்களே!*
*நீடுழி வாழ்க பல்லாண்டு!*
*போற்றும்வகையில் பொதுச்செயலர் பொறுப்பிலிருக்க*
*தேற்றும் சமுதாயம் பொறுப்புடன் செயல்படும்*
*பொதுச்செயலர் **கிருஷ்ணா சிங்** அவர்களே வாழ்க!*
*தாயென மக்களை நோயணுகாமல்*
*தண்ணரிய அன்பால் சமுதாயம் காக்கும்*
*ஒப்பாரும் மிக்காரும் போற்றும்*
*மாவட்டத்தலைவர் **சிவராம் சிங்** அவர்களே*
*நீண்டகாலம் வாழ வாழ்த்துகிறேன்!*
*அன்பால் அரவணைத்து இருகரம் கூப்பி*
*அனைவர் உள்ளத்தில் இடம் பெற்ற*
*மண்டலச் செயலாளர் **அர்ஜுன் சிங்** அவர்களே வாழ்க!*
*இனமான இளவரசு இனிதே இங்கிருக்க!*
*குணமான கோமான்கள் சூழ்ந்திருக்க!*
*யூகமான **யுவராஜ் சிங்** அவர்களே வாழ்க!*
*தொடரட்டும் உங்கள் பணி தொய்வின்றி!*
*கிள்ளை மொழி பேசி நெஞ்சை*
*அள்ளும் விதமாக செயல்படும்*
*மாவட்டச் செயலர்*
*சுரேஷ்பாபு அவர்களே வாழ்க!*
*சிங்கமென சீறி தங்கமென பணிபுரிந்திடுக!*
*கனிமொழி பேசும் கரைபடாத கரம்!*
*உழைப்பால் உயர்ந்த உன்னத மனிதர்!*
*பங்கமில்லாமல் வங்கியில் பணியாற்றிய*
*பொருத்தமான பொருளாளர் **உமாநாத் சிங்** அவர்களே!*
*வாழ்க! வாழ்க! வாழிய பல்லாண்டு!*

**நா. இராசாராம் சிங்,**
**தமிழாசிரியர் பணிநிறைவு)**
**தூ.நா. பாளையம், செல் : 9500560904**

# பொந்தில் சங்கம் (தமிழ்நாடு)

பதிவு எண்: S.No. 326 வருடம் 1969)

தலைமையகம் :
பு.எண்.40, குப்புமுத்து முதலி தெரு,
திருவல்லிக்கேணி,சென்னை-5.போன் :28583313

கோயமுத்தூர்கிளை ப.எண்.136, புதிய எண்.300,
சுக்ரவார்பேட்டை, கோவை-1
போன் : 94433 76187, 94435 66650

## ஒரு வேண்டுகோள்

தமிழகத்தில் பொந்தில் சமூகத்தைச் சேர்ந்த நமது சமூகத்தாரின் முகவரிக் கையேடு ஒன்றினை தலைமை சங்கத்தின் ஒப்புதலோடு வெளியிட முடிவு செய்துள்ளோம். அதற்கு ஒரு கணிசமான விலையினை நிர்ணயித்து நமது சங்க உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்ய முடிவு எடுத்துள்ளோம். மொத்த பிரதி ஆயிரம் (1000) சமூகத்தார் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் விளம்பரங்களை பிரசுரம் செய்து இந்த முயற்சியை வெற்றியடையச் செய்ய வேண்டுகிறோம்.

வரை முறைகள் :
விளம்பர அளவு : 120mm x 200 mm
விளம்பரத்தின் விலை பட்டியல் :

| விபரம் | மல்டிகலர் | கறுப்பு / வெள்ளை |
|---|---|---|
| அட்டையின் பின்புறம் | ரூ.5000/- | |
| அட்டை பின்புறம் உள்ளே | ரூ. 3000/- | |
| அட்டை முன்புறம் உள்ளே | ரூ. 3000/- | |
| முழு பக்கம் (நடுவில்) | ரூ. 1500/- | ரூ.800/- |
| அரைப்பக்கம் (நடுவில்) | ரூ. 800/- | ரூ. 500/- |

Bondil Association,Coimbatore என்கிற முகவரிக்கு வரைவு ஓலை (டி.டி.) மூலமாக அனுப்பப் படவேண்டும்.
விளம்பர டிசைன்கள் அனைத்தும் கோரல்டிரா 11 மென்பொருளில் டிசைன் செய்து குறுந்தட்டு மூலமாக அனுப்ப வேண்டும்.

---

**அன்பார்ந்த "பொந்தில்" இதழ் பொறுப்பாசிரியர் அவர்களுக்கு வணக்கம்.**

1983ம் ஆண்டு நமது மாநில சங்க பெரும் தலைவர், பெருமதிப்பிற்குரிய அமரர் B. கோவிந்தசிங் மற்றும் குழுவினரால் எங்கள் கோயம்புத்தூர் கிளைச் சங்கம் துவக்கப்பட்டது. சிறுகச் சிறுக வளர்ந்து இன்று வியக்கத்தக்க வகையில் பூரண பொலிவுடன், அன்பும் ஆர்வமுமிக்க நிர்வாகிகளால் மிகவும் சிறப்புற விளங்கி வருகிறது. இதில் மாநில சங்கத்தின் பணி மகத்தானது. ஆண்டுதோறும் மாநில சங்கத் தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் குழுவினர் வருகை தந்து வழிகாட்டுகின்றனர்.

